<u>DEPOSITION OF WITNESS</u>
<u>(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)</u>
<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.</u>

| | |
|---|---|
| Case No. | CC . 167/2024 |
| Deposition of Witness for | PW 1 |
| Name | காளீஸ்வரி |
| Father / Husband Name | செந்தில்குமார்- |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 07th January 2025.

---

<u>**(எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**</u>

<u>**முதல் விசாரணை:-**</u>

1) நான் கண்ணமுத்தான்கரையில் வசித்து வருகிறேன். என் கணவர் வெளியூரில் JCB டிரைவராக வேலை செய்து வருகிறார். எனக்கு 3 பிள்ளைகள் எனது மூத்த மகளான கேமநாயகி சிவகங்கை ஜஸ்டின் பள்ளியில் சம்பவ சமயம் 12 ம் வகுப்பு படித்ததால் 28.02.2024 ம் தேதியன்று பள்ளிக் கட்டணம் செலுத்துவதற்காக எங்கள் ஊரிலிருந்து நான் காலையில் புறப்பட்டு சிவகங்கை மதுரை முக்கிற்கு வந்து இறங்கி மேற்படி பள்ளிக்குச் சென்று பள்ளிக் கட்டணத்தை செலுத்திவிட்டு மீண்டும் எங்கள் ஊர் செல்வதற்காக வீட்டிற்கு தேவையான சாமான்களையும் கட்டைப் பையில் வாங்கிக் கொண்டு அந்தக் கட்டைப் பையில் பர்சில் ரூபாய் 1,000/- வைத்துக் கொண்டு பேருந்து ஏறுவதற்காக மாலை 05.00 மணியளவில்

webcopy

மதுரை முக்கில் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்தேன். அப்போது 3 பெண்கள் என்னை பின்தொடர்ந்து என்னை உரசிக்கொண்டு வந்ததுபோல் இருந்தது.

2) மாலை 05.30 மணியளவில் எங்கள் ஊர் வழியாக செல்லும் இளையான்குடி பேருந்து வந்ததும் நான் பேருந்தில் ஏறினேன். என் பின்னேயே அந்த 3 பெண்களும் ஏறினார்கள். அதன் பின்பு, என் கட்டைபையில் பர்சில் வைத்திருந்த ரூபாய் 1,000/- பணம் காணாமல் போனதால் நான் பேருந்தில் சத்தம்போட்டவுடன் பேருந்தை நிறுத்தி என்னை இறக்கிவிட்டார்கள். அப்போது அந்த 3 பெண்களும் அங்கிருந்து இறங்கி ஓடிவிட்டார்கள். என்னுடைய பர்சில் இருந்த பணத்தை அந்த 3 பெண்களும் எனக்குத் தெரியாமல் திருடிக் கொண்டு ஓடிவிட்டதால் மேற்படி தகவல் குறித்து போன் மூலம் எனது மச்சான் சந்திரசேகர் என்பவருக்கு தகவல் கொடுத்தேன். காளீஸ்வரனுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

3) அதன் பிறகு, அந்த இடத்தில் தேடிப் பார்த்தோம். அந்த 3 பெண்களும் கிடைக்காததால் மேற்படி திருட்டு சம்பவம் தொடர்பாக சிவகங்கை நகர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன் பின்பு மறுநாள் அந்த பணத்தை திருடிய நபர்களை பிடித்ததாக போலீசார் கொடுத்த தகவலின் பேரில் நான் சென்று என்னிடம் இருந்து பணத்தை திருடிய 3 பெண்களையும் அடையாளம் காட்டினேன். அந்த 3 பெண்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவர்களைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

4) என்னிடமிருந்து எதிரிகள் திருடிச் சென்ற பணத்தில் ரூபாய் 700/- மட்டும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதை நீதிமன்றம் மூலம் மனு செய்து பெற்றுக் கொண்டேன். (**அந்த தொகையை காட்டக்கூடிய புகைப்படம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> வாய்ப்பு அளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 07.01.2025,**
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

Webcopy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 167/2024 |
| Deposition of Witness for | PW 2 |
| Name | சந்திரசேகர் |
| Father / Husband Name | பழனிச்சாமி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 07th January 2025.

---

**(எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் புக்குளி மாதவா நகரில் வசித்து வருகிறேன். சென்டரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மனைவியின் தங்கை ஆவார். அ.சா.1 28.02.2024 ம் தேதி காலை சிவகங்கை ஜஸ்டின் பள்ளிக்கு பீஸ் கட்டுவதற்காக செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். அதன் பிறகு அன்று மாலை 05.40 மணி இருக்கும் அ.சா.1 எனக்கு போன் மூலம் சிவகங்கை மதுரை முக்கில் பஸ் ஏறுவதற்காக நின்றுவிட்டு 05.30 மணியளவில் பஸ் ஏறி பார்த்தபோது பணம் காணவில்லை எனவும் பெண்கள் தான் பணத்தை திருடியதாகவும் சொன்னார். அதன் பிறகு மேற்படி தகவலை

என் தம்பி காளீஸ்வரன் என்பவருக்கு போன் மூலம் சொல்லி சம்பவ இடம் சென்று தேடிப் பார்த்ததில் அந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட பெண்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை. மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மறுநாள் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பிடித்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் நானும், அ.சா.1ம், காளீஸ்வரனும் சென்றோம். அங்கு சம்பவத்தில் ஈடுபட்ட 3 பெண்களையும் பிடித்து வைத்திருந்தார்கள். அந்த 3 பெண்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். அ.சா.1 இடம் இருந்து திருடிய பணத்தில் ரூபாய் 700/- யை நீதிமன்றம் மூலம் அ.சா.1 பெற்றுக்கொண்ட விவரம் அறிந்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** வாய்ப்பு அளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 07.01.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy